පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය
பொலிஸ் ஊடகப் பிரிவு
POLICE MEDIA DIVISION
සෙත්සිරිපාය, බත්තරමුල්ල

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| තැ.පෙ.අංකය<br>த. பெ.இ<br>Po.Box No | 10120 | | | | ෆැක්ස්<br>தொலைநகல<br>Fax | 011-2171635 |
| දුරකථන<br>தொலைபேசி<br>Telephone | 011-2887973<br>(HUNTING) | වෙබ්.ලිපිනය<br>இணையதளம்<br>Web Site | www.Police.lk | | ඊ මේල්<br>மின்னஞ்சல்<br>E-mail | dir.media@police.gov.lk |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இலக்கம்<br>My NO | 812 / 2024 | ඔබේ අංකය<br>உமது இலக்கம்<br>Your No | / 2024 | දිනය<br>திகதி<br>Date | 14/05/2024<br>நேரம் - 1640 |

**ஊடக**

## நீதிமன்ற உத்தரவை மீறியமை தொடர்பாக சந்தேகநபர்கள் மூவரை கைது செய்தமை. – சம்பூர் பொலிஸ் நிலையம்.

LTTE அமைப்பின் உறுப்பினர்கள் உயிரிழந்தமையை நினைவுகூருவதற்காக கிழக்கு மாகாணத்தின் பொலிஸ் பிரிவுகளில் நினைவேந்தல் நிகழ்வுகள் தயாராகி வருவதாக புலனாய்வு பிரிவினர்களினூடாக பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், விசேடமாக 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் உயிரிழந்த LTTE உறுப்பினர்களை நினைவுக்கூரும் நோக்கத்துடன் ஒரு சில தரப்பினர் செயற்படுவதாக பொலிசாருக்கு தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதன்படி, திருக்கோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுகளில் இவ்வாறான நினைவுக்கூரல் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக கிடைக்கப்பெற்றுள்ள தகவலின் அடிப்படையில் சம்பூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் மூதூர் கௌரவ நீதவான் நீதிமன்றிற்கு அறிக்கை சமர்ப்பித்து LTTE அமைப்புடன் தொடர்புப்பட்ட உறுப்பினர்களை நினைவுக்கூறுவதற்கான நிகழ்வானது சட்டவிரோதமான செயற்பாடு எனவும் அதனை தடுத்து நிறுத்துவதற்கு தடை உத்தரவு பெற்றுக்கொள்ளப்பட்டது.

இதனுடன் தொடர்புப்பட்ட நபர்களுக்காகவும், வேறு நபர்களுக்காவும் பெறப்பட்ட தடை உத்தரவு என்பதுடன், இவ்வாறான நிகழ்வுகள் ஏற்பாடு

செய்யப்பட்டுள்ள இடங்களுக்கு சென்ற சம்பூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் நீதிமன்ற தடை உத்தரவை காண்பிக்க நடவடிக்கை எடுத்த போது, இந் நீதிமன்ற தடை உத்தரவை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் கூறி நினைவேந்தல் நிகழ்வை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவை மீறிய பெண் ஒருவரை கைது செய்வதற்காக அவரின் வீட்டிற்கு சென்ற சந்தர்ப்பத்தில் பெண் சந்தேக நபரின் மகள் தனது கழுத்தில் கத்தியை வைத்துக் கொண்டு தற்கொலை செய்து கொள்வதாக பொலிசாரை மிரட்டினார். அச் சந்தர்ப்பத்தில் பொலிசாரினால் இந் நிலைமையை கட்டுக்குள் கொண்டுவந்ததுடன், அவ்விடத்திலிருந்த சந்தேக நபர் ஒருவரும், பெண் சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தண்டனைச் சட்டக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களான நீதிமன்ற உத்தரவை மீறுதல், ஆபத்தான ஆயுதங்கள் மூலமாகவோ அல்லது வேறு முறையாகவோ விருப்பதுடன் தானாக காயத்தை ஏற்படுத்தி கொள்ளுதல், அரச உத்தியோகத்தர்களால் முறையாக அறிவிக்கப்பட்ட உத்தரவை மீறுதல் மற்றும் பயமுறுத்துதல் ஆகிய குற்றங்களுக்காக மேற் கூறிப்பிட்ட சந்தேக நபர்கள் 2024.05.12 ஆம் திகதியன்று சம்பூர் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டு 2024.05.13 ஆம் திகதி மூதூர் கௌரவ நீதவான நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் மே மாதம் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர் மற்றும் பெண் சந்தேக நபர்கள் மூவரும் கஞ்சி காய்ச்சி பறிமாறிய காரணத்தினால்தான் கைது செய்யப்பட்டதாக சமூக வலைத்தளங்களில் பதிவேற்றப்பட்டுள்ளதுடன், இச் சம்பவம் தவறான முறையில் சித்தரிக்கப்பட்டுள்ளது. இக் குற்றத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் மற்றும் பெண் சந்தேக நபர்கள் மூவரும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் மற்றும் விசேடமாக LTTE நினைவுகூரும் நிகழ்வுக்கு எதிராக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். இச் சம்பவத்தின் போது பெண் சந்தேக நபர் ஒருவரால் கூரிய ஆயுதத்தால் தாக்கியதன் காரணமாக பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்து வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும், திருக்கோணமலை துறைமுகம் மற்றும் உப்புவெளி பொலிஸ் பிரதேசங்களில் இந் நினைவேந்தல் நிகழ்வு நடாத்தப்படுவதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்த நிலையில் அதனை தடுப்பதற்காக இப் பொலிஸ் நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரிகளால் நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்டுள்ளனர். நீதிமன்ற கட்டளைக்கு இணங்க சமபந்தப்பட்ட

தரப்பினர்களால் இப் பொலிஸ் பிரதேசங்களில் நினைவேந்தல் நிகழ்வை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம்.**

**பொலிஸ் ஊடகப் பிரிவு.**